# இந்திப் பாடம் காங்கரஸ் முடிபல்ல.

## அதற்கு காங்கரஸ் வாதிகள் கட்டுப்பட முடியாது

### ஹிந்தி எதிர்ப்பாளர் காங்கரஸ் எதிரிகள் என்பது புரட்டு.

## ஒரு காங்கரஸ் வாதி கருத்து.

கம்பன்.

நாமக்கல், ஜூன் 27.

அய்யா, இந்தி வேண்டாமென்று மற்ற பத்திரிகைளுக்கு கட்டுரை எழுதினால் அவைகள் பிரசுரிப்பதில்லை. ஆகையால் தங்களுக்கு எழுத நேர்ந்தது கீழ்வரும் கட்டுரைகளில் நீக்க வேண்டியதை நீக்கி அவசியம் பிரசுரிப்பீர்களென்று நம்புகிறேன்.

"வேறு வேறு பாஷைகள் கற்பாய், நீ வீட்டு வார்த்தை கற்கிலாய் போ, போ," என்று தமிழினிடத்து மிக மிக பேரன்பு வைத்த பாரதியார் என்ற சுப்பிரமணியய்யர் நாட்டின் மொழி போகின்ற போக்கை வெறுத்து பாடியிருக்கிறார். தற்போது நமது சென்னை அரசாங்கம் இந்தியை 1, 2, 3 பாரங்களில் மாணவர் அவசியம் படிக்க வேண்டுமென்று விரும்புகிறது. நானும் ஒரு தேசிய வாதிதான். இன்று அல்ல, என்றோ ஒருநாள் அகில இந்திய அரசாட்சி சட்டசபையில் பல மொழி பேசும் பிரதிநிதிகள் கருத்தை வெளியிடுவதற்கு ஒரு பொதுமொழி அவசியம் என எண்ணக்கூடியவன்தான். ஆனால் இன்று நமது மக்களின் கல்வியை நோக்குங்கால் மிக மிக சொற்பத் தொகையினர்தான் படித்திருக்கின்றனர். சென்ற சில ஆண்டுகளாகத்தான் எல்லா சமூகமும் அவசியம் படித்தே தீரவேண்டும் என்கிற நிலைமைக்கு வந்து பெரும்பாலும் படிக்க முன் வந்து கொண்டிருக்கிறார்கள்.

மக்களுக்குபடிப்பின்மீது ஆசை ஏற்பட்ட சமயத்தில் அரசாங்கம் தாய்மொழி விருத்திக்கு வகை தேடாது இந்தி கட்டாயம் படித்தாதாக வேண்டும் என்று பலவந்தப்படுத்துவதாக இருக்கிறது.

### கூட்டங்களுக்கு வருவோரெல்லாம் மேதாவிகளா?

இந்திஎதிர்ப்புமிகுதிப்பட்டிருக்கிறது. எதிர்க்கிறவர்களில் காங்கரஸ் விரோதிகளும் சுயமரியாதையுள்ள காங்கரஸ்காரர்களும் கட்சி மனப்பான்மையில்லாதவர்களும் தமிழன்பர்களும் கலந்தேயிருக்கிறார்கள். இதை மதியாது பொதுக்கூட்டங்களில் 20000 பேர் கையை உயர்த்தி ஆதரிக்கிறார்களென்றுபத்திரிகையில் கட்டுரைகள் வந்துகொண்டே இருக்கின்றன. பொதுக் கூட்டங்களுக்கு வரும் பெரும்பாலோர் எல்லோரும் இந்தி வந்தால் நல்லது; கெட்டது; தேசத்திற்கு பொது மொழி வேண்டும் என்ற அவ்வளவு தெரிந்த கல்வி யறிவுடையோராயிருக்கவே முடியாது. ஏதோ சிலர் மேடை மீது கண்ணியமுள்ளவர்கள் கையை உயர்த்தினால் எல்லோரும் உயர்த்துகிறார்களே யொழிய அத்தனைபேரும் தெரிந்து கையை உயர்த்தினார்களென்று கருத முடியாது. பத்திரிகைகளில் பத்தி பத்தியாய் எழுதி பெரும்பாலார் கையை உயர்த்தினதினாலேயே பெரும்பாலோர் ஆதரிப்பதாய் முடிவு கட்டி விடக்கூடாது. தாய் மொழியாகிய தமிழ் மொழியில் இல்லாத அத்தனை பெரிய விஷயங்கள் என்ன அடங்கி இருக்கிறது. (இந்துஸ்தானமே துளசிதாஸ் ராமாயண்சே படுகர் கோயி புஸ்தக் நஹி ஹை) இந்தியால் துளசிதாஸ் ராமாயணத்தை விட பெரிய புத்தகங்கள் ஒன்றுமில்லை என்றால் அதை படிப்பதால் மாணவர்களுக்கு என்ன லாபம். தமிழில் எத்தனை ராமாயணங்களும் பாரதங்களும் புராண இலக்கிய காவியங்களும் எண்ணற்றன மலிந்து கிடக்கின்றன. இல்லை அப்படியே தமிழ் மொழியில் இல்லாத மக்கள் அறிவுவளர்ச்சிக்குவேண்டுவன அதில் பொதிந்து கிடந்தால் பாரதி சொன்னது போல் பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும். அவ்விதம் இயற்றினால் மாணவர்கள் தாய் மொழியில் படித்து முன்னேற்றமடைவார்கள். அதைவிட்டு விட்டு என்ன என்னமோ உதாரணங்கள் சொல்லுகிறார்கள். என்ன உள்ளக் கருத்தோ ஒன்றும் விளங்கவில்லை. ஒருவர் பல பாஷை கற்றுக்கொண்டால் நல்லதுதான். ஆனால் தாய் மொழியில் தேர்ச்சியடையாத ஒருவன் பிற மொழிகள் எத்தனை கற்றாலும் பிரயோசனமில்லை. எந்த அரசாங்கத்துக்கும் உணவு, உடை மொழி முதலியவற்றை தேர்ந்தெடுத்து ஜனங்களை கட்டாயப்படுத்த அதிகாரமிடையாது. அதிலும் ஜனநாயக சர்க்கார் அவ்விதம் செய்வது வருந்தத்தக்கதாகும். ஆதரிப்பு எதிர்ப்பு இவ்விகளை நீக்கி நாட்டின் படித்த மக்களின் மனோ நிலையை தெரிந்து செய்தால் நலம், இல்லை அதைவிட்டு பலவந்தம் பிடித்ததை விட்டால் கௌரவக் குறைவு. அதற்காகவாவது செய்துதான் ஆகவேண்டுமென்றால் அதற்கு யார் என்ன சொல்ல முடியும்.

### இந்தி காங்கரஸ் முடிபல்ல.

இந்தி காங்கரஸ் தீர்மானங்களில் ஒன்றாக இல்லை. இது தனி மனிதர் முயற்சி. இதற்கு எவரும் கட்டுப்பட முடியாது.

---

## வில்வாரணி தமிழ் நூல் நிலயம்.

### முதலாவது ஆண்டுவிழா.

(ஒரு நிருபர்)

வில்வாரணி, ஜூன் 29.

போளுரைச் சேர்ந்த வில்வா